# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 23 செவ்வாய்க்கிழமை (09-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 298


# ஓமந்தையில் கடும் சண்டை நடக்கிறது!

## ஒன்றிணைந்த படையினர் மூன்று முனைகளில் நகர்வு

கொழும்பு நவம்பர் 9

வன்னியில் ஓமந்தை நகர்ப் பகுதியில் விடுதலைப்புலிகளின் முன்னேற்றத்தைத் தடுக்கும் வகையில் பாதுகாப்பு அரண்களை அமைத்துள்ள படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை தொடர்ந்து நடைபெறுகிறது.

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'றோய்ட்டர்' செய்தி நிறுவனம் நேற்று மாலை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

வன்னி நிலைமை குறித்து இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு றோய்ட்டர் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஓமந்தைப் பகுதியில் மேலதிக காவலரண்கள் அமைக்கப்பட்டுசண்டை தொடர்ந்து இடம் பெறுகின்றது

விடுதலைப் புலிகளின் முன்னேற்றத்தைத் தடுக்கும் வகையில் அந்தக் காவலரண்களில் இருந்து படையினர் பதில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்தில் ஐவர் பலி!

கொழும்பு, நவ 9

கண்டியிலிருந்து மஹியங்கனை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியாருக்கு சொந்தமான இன்ரசிற்றி பஸ் ஒன்று நேற்றுக் காலை உடுதும்பறைப் பகுதியில் வீதியில் இருந்து விலகி 200 அடி பள்ளத்துள் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 5 பேர் பலியாகினர்; 14 பேர் படுகாயமடைந்தனர்.

(இ-7)

## திருமலையில் மின்மாற்றி தகர்ப்பு

கொழும்பு, நவ. 9

திருகோணமலை மாவட்டத்தில் கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மின்மாற்றியில் — நேரம் குறித்து வைக்கப்பட்ட — இரு குண்டுகள் வெடித்துள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பை அடுத்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் மின்சார சபைக்குச் சொந்தமான லொறி ஒன்றில் இருந்து மேலும் இரு குண்டுகளைக் கைப்பற்றிச் செயலிழக்கச் செய்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

## வேலூர் தடுப்பு முகாமில் ஈழத்தமிழர் உண்ணா விரதம்

### இருவர் நிலை கவலைக்கிடம்

சென்னை, நவ. 9

வேலூர் திப்புமகால் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களில் நால்வர் உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மருத்துவ சிகிச்சை பெறவேண்டியவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த முகாமில் தங்கி உள்ள இவர்கள் உரிய மருத்துவ வசதி செய்து தருமாறு கோரியே போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

கடந்த ஆறு நாள்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தப் போராட்டம் காரணமாக சிவரூபன், மோகன் என்ற இருவர் நிலை மோசமாகியுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

(இ-3)

## மணலாறு மாவட்டத்திலிருந்து 7 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

வவுனியா. நவ. 9

மணலாறு மாவட்டத்தில் இருந்து ஏழாயிரம் பொதுமக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து அநுராதபுரம் வந்துள்ளனர் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

ஜானகபுர, ஓதியமலை, மதியாமடு, மணலாறு ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அநுராதபுரம் பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் பொதுக்கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

(இ-3)

## தணிக்கையை நீக்குமாறுகோருகிறது சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு

கொழும்பு, நவ. 9

''இராணுவச்செய்திகள் மீது விதித்துள்ள தணிக்கையை அரசு உடன் நீக்கவேண்டும்'' என்று சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு அரசைக் கேட்டுள்ளது.

தணிக்கை அமுல் செய்யப்பட்டமை தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படிக் கோரப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனநாயக நாடு ஒன்றில் மக்கள் உண்மை நிலையை அறிவதற்கு உரிமை இருக்க வேண்டும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நான்காவது தடவையாக செய்தித் தணிக்கை அமுலுக்கு வந்துள்ளது.

மக்களிடம் பாதுகாப்பு வரி என்று அறவிடப்படும் பெருமளவிலான நிதியிலிருந்து நடத்தப்படும் யுத்தம் தொடர்பான உண்மை நிலையை அறியும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு. அந்தச் செய்திகளை வெளியிடும் உரிமை ஊடகவியலாளர்களுக்கும் உண்டு. இந்த உரிமை தணிக்கை மூலம் மறுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர்மாதம் 21 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் காலகட்டத்தில் பொது மக்கள் உண்மை நிலையை அறியத் தணிக்கை நீக்கப்படவேண்டும்--என்றுள்ளது

அரசாங்கம் அமுல் செய்துள்ள செய்தித் தணிக்கையை கொழும்பில் உள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும் கண்டித்துள்ளதுடன் தணிக்கை முறையை நீக்குமாறும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

(இ-3)

## செல்வா சமாதி முன் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், நவ 9

நாவாந்துறை மண்பிட்டிப் பகுதியில் வாழ்ந்த மீனவர்களுக்கு வீடு அமைக்க இடம் ஒதுக்கப்படாமையைக் கண்டித்து அடையாள உண்ணாவிரதம் ஒன்று இன்று காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை தந்தை செல்வா சமாதிக்கு முன்பாக இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகரசபை உறுப்பினர் செ. விஜயரத்தினம் தலைமையில் பாதிக்கப்பட்ட மக்கள் இதில் பங்குபற்றுவர்.

(இ-3)

## 119 புலிகள் உயிரிழப்பு!

வவுனியா, நவ. 9

வன்னியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கையில் நேற்றுவரை 43 பெண்கள் உட்பட 119 பேர் தமது தரப்பில் உயிரிழந்துள்ளனர் என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நெடுங்கேணியில் கடந்த 5 ஆம் திகதி கரும்புலி மேஜர் சசி (நாகரத்தினம் சுகந்தினி— யாழ்ப்பாணம்), கரும்புலி மேஜர் அருளன் (நந்தகோபாலன் துஷ்யந்தன் — யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் பரணி (விநாயகமூர்த்தி கேதீஸ்வரன் —திருமலை) ஆகியோரும்—

புதூர் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி கப்டன் பதஞ்சலி (சிதம்பரப்பிள்ளை சுமித்திரா — கிளிநொச்சி) என்பவரும்— உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-க-3)

## தணிக்கைக்கு எதிராக வழக்கு ஐ. தே. க. தாக்கல் செய்யும்

கொழும்பு, நவ. 9

வடக்கு—கிழக்கு யுத்தம் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள செய்தித்தணிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்போவதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது விடயமாக சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பும் மனுத் தாக்கல் செய்ய சட்டத்தரணிகளுடன் ஆலோசனைசெய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம்—இந்தத் தணிக்கையை ஐ. தே. க. மற்றும் ஜே வி.பி. உட்பட பல எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன. தமிழ்க்கட்சிகள் கருத்து எதனையும் வெளியிடவில்லை. (இ-3)

## ஸிம்பாப்வே நிபுணர் கண்ணி வெடியில் காயம்

அளவெட்டி, நவ. 9

அளவெட்டி அருணோதயக் கல்லூரி சுற்றாடலில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஸிம்பாப்வே நிபுணர் ஒருவர் காலில் படுகாயமடைந்தார்.

கடந்த சனிக்கிழமை கண்ணிவெடி அகற்றிக் கொண்டிருந்த சமயம் அது வெடித்ததிலேயே அவர் காயமடைந்தார் என்றும் —

அதன் பின்னர் கண்ணிவெடி அகற்றும் பணி நிறுத்தப்பட்டிருந்தது என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-13)

## தொலைபேசி பரிவர்த்தனை பெட்டி குண்டினால் தகர்ப்பு!

கொழும்பு, நவ, 9

மருதானை ஆமர் வீதிப் பகுதியில் அமைந்திருந்த ரெலிக்கொம் நிறுவனத்தின் தொலைபேசிப் பரிவர்த்தனைப் பெட்டி நேற்றுக்காலை 6 மணியளவில் இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பால் 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-க-3-7)

## அரசுக்கு ஆதரவு தெரிவித்த எம்.பிக்கள் ஐவரும் ஐ. தே. கவிலிருந்து நீக்கம்!

### ரணில் தலைமையில் கூடி செயற்குழு நடவடிக்கை

கொழும்பு, நவ. 9

அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள ஐ.தே.கவின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மாகாணசபையின் மூன்று உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து வெளியேற்றுவது என்று ஐ. தே. க செயற்குழு நேற்று முடிவு செய்துள்ளது.

ஐ. தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி சரத் அமுனுகம, விஜயபால மெண்டிஸ், நந்தா மத்தியூ, சுசில் முனசிங்க, சூலபண்டார ஆகியோர் உட்பட மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்கள் 35 பேர் கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

இது விடயமாக ஆராய்வதற்காக ஐ தே. கவின் செயற்குழுக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது.

பிரஸ்தாப ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து நீக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் —

இந்த முடிவு நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் — கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறல தெரிவித்தார்.

அரசுக்கு ஆதரவு தெரிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபாலகத்தில் பக்ஸ் சேவை

யாழ்ப்பாணம். நவ. 9

யாழ். பிரதம தபாலகத்தில் கடந்த சனிக்கிழமை பக்ஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் இந்தச் சேவையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

[ஐ-5]


**லிபேட்டி** அச்சுவேலி.
அர்ஜுன் சங்கீதா
நடித்த
**முதல் உதயம்**
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
(சி/9766)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய் — சாலினி
நடித்த
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70814)

**ராஜா**
யாழ்ப்பாணம்
ரஜனி - ரோஜா
மற்றும் பலர் நடித்த
**உழைப்பாளி**
10-30, 2-30,
(சி/9680)

**ஆண்டிறுதிப் பரீட்சை**
(3 ஆம் தவணை)
தரம் 1 — 5 வரை
10-11-99 புதன்
பி. ப. 2.30 மணிக்கு
ஆரம்பமாகும்.
தரம் 6 — 11 வரை
சனிக்கிழமை நடைபெறும்.
★ வினாத்தாள்கள் தேவைப் படுபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
BOND யாழ்நகர்.
(70813)


## வாழ்த்துகின்றோம்



**ப. செல்லத்துரை** (ஜே. பி.)

கைதடி கலைவாணி வித்தியாலய அதிபரும்
எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும்
கூட்டுறவாளருமாகிய

**ப. செல்லத்துரை** அவர்களுக்கு
**சமாதான நீதிவான் பட்டம்**
கிடைத்தமைக்காக எங்கள் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை,
பணியாளர்கள், பொதுச் சபை உறுப்பினர்கள்.
தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
(சி/9723)

## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பின் சக மாணவி
**பிரபாலினியின்**
அன்புத் தந்தையார்
**ஜெகநாதன்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

2001 A/L வர்த்தக பிரிவு மாணவிகள்
யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(70815)

## நுண்கலைமாணி

**சித்திரமும் வடிவமைப்பும்**
அனுமதிகளுக்கான
**நேர்முகத்தேர்வு**

சித்திரமும் வடிவமைப்பும் உளச்சார்புத் தேர்வில் சித்தியடைந்த மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுகின்றார்கள். நேர்முகத்தேர்வு 12-11-99 காலை 9 00 மணிக்கு பல்கலைக்கழகச் சபா மண்டபத்தில் நிகழும் பின்வரும் ஆவணங்களுடன் நேர்முகத் தேர்வுக்கு மாணவர்கள் வருகை தருதல் வேண்டும்.

01. பிறப்புச் சான்றிதழ்
02. க. பொ. த உயர்தர பெறுபேற்றுச் சான்றிதழ்
03. க. பொ. த உயர்தர மொத்தப் புள்ளிகள்
04. பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளமையை நிரூபிக்கும் ஆவணம்
05. பாடசாலை விடுகைப் பத்திரம்
இவற்றின் மூலப்பிரதிகள் ( Original )
06. தேசிய அடையாள அட்டை என்பன

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர்
(சி/9763)

## கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 1999

சித்தியடைந்த (29) இருபத்தொன்பது மாணவர்களையும் அவர்களைக் கற்பித்து
நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| செல்வன் ப. சஞ்ஜீவன் | — 164 | செல்வன் சு. அரவிந் | — 164 |
| செல்வன் ப. செந்தூரன் | — 160 | செல்வன் ம. நோவாப்பிரதீப் | — 157 |
| செல்வி பா. மயூரதி | — 153 | செல்வன் த. சிந்துஜன் | — 151 |
| செல்வன் சொ. கிரீஷன் | — 147 | செல்வன் ஸ்ரீ. துஷ்யந்தன் | — 147 |
| செல்வன் உ. சுதர்சன | — 142 | செல்வி பு. சஜனி | — 140 |
| செல்வி ம. தர்மிலா | — 140 | செல்வன் சி. கபிலன் | — 136 |
| செல்வி அ. அனுசியா | — 131 | செல்வன் பா. மிரோஜன் | — 131 |
| செல்வன் சி. விஜிந்தன் | — 130 | செல்வி இ. வேணுகாயினி | — 128 |
| செல்வி ச. நிரஞ்சினி | — 128 | செல்வன் தே. லக்ஷன் | — 127 |
| செல்வன் இ. சுதன் | — 127 | செல்வன் ஜெ. கௌசிகன் | — 126 |
| செல்வி இ. நிமலினி | — 125 | செல்வன் ப. சாருஜன் | — 125 |
| செல்வி செ. பிருந்தா | — 124 | செல்வன் க. அபராஜிதன் | — 124 |
| செல்வி தி. திவ்யா | — 123 | செல்வன் த, வாகீசன | — 123 |
| செல்வி வி. நிரோஜிகா | — 121 | செல்வி கு. பிருந்தா | — 120 |
| செல்வன் இ. சுயாந்தன் | — 119 | | |

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(சி/9727) பெற்றோர், பழைய மாணவர்கள், மாணவர்கள்.

## விசேட அடையாள அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம். நவ. 9

யாழ்.நகர் மேற்கு (ஜே 73) கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று காலை 9 மணிக்கு ஆரியகுளம் இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படும் என்று அந்தப்பகுதி கிராம சேவையாளர் அறிவித்துள்ளார்.

(இ-3)

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 2-30 மணிக்கு வலய அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

ஆசிரியர்களை உள்வாங்குவது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-3-133)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கௌரிதேவி பரமேஸ்வரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் செட்டிகுளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ப. கௌரிதேவி 7-11-99 அன்று காலமானார்.

அன்னார் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி — இந்திராணி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிறிக்குமார், கௌசலாதேவி, ராஜ்குமார், ரேணுகாதேவி, சிவரேவதி, ரவிக்குமார், சாந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஜெகமோகன் — ரேணுகாதேவி
(தங்கை)

147, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
(ஜெகன் களஞ்சியம்)
(70804)

## திருமதி றெஜினா அருமைநாயகம்

யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி றெஜினா அருமைநாயகம் 08-11-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசவ் அருமைநாயகத்தின் அன்பு மனைவியும் ருக்மணி (மலேசியா), றஞ்சி (கனடா), காலஞ்சென்ற வின்சன்ட் —யோசவ், ரதி, காலஞ்சென்ற ராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் றஞ்சினி (கொழும்பு), றஞ்சித் (டென்மார்க்) ஆகியோரின் பெரிய தாயாரும் குலதாஸன் (கொழும்பு), சாமினி (டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும் யதுரசன் (U K). ஜனார்த்தனன் ஜலஜன் (கொழும்பு). அஸ்ரியா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09-11-99) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து யாழ். அடைக்கல நாயகி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுத்த பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றஞ்சினி குலதாஸ்
(பெறாமகள்)

இல. 18,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(70818)

## சங்கரப்பிள்ளை ஜெகநாதன்

(தபாற் திணைக்களம் — யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை ஜெகநாதன் நேற்று 8—11—99 திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும் சிவகௌரியின் அன்புக் கணவரும், பிரபாலினி (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி A/L வர்த்தகம்), கஜேந்திரன் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி, ஆண்டு 9) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரசாமி (ஓய்வு பெற்ற லிகிதர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), சௌபாக்கியவதி அம்மாள் ஆகியோரின் அன்பு மருமகனும் ரேணுமதி, காலஞ்சென்ற கௌரிதேவி மற்றும் தேவாம்பிகை, தேவராசா (ஓய்வு பெற்ற Valuation Inspector), குருலிங்கம் (Quantity Surveyor, Oman), சிவஈஸ்வரி ஆகியோரின் சகோதரனும் சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), சிவகுமாரன், செந்தில்வேல் (ஜேர்மனி), வைரவதாசன், ஜெயந்தி (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகராசா, மற்றும் ஸ்ரீரங்கநாதன், சிவக்கொழுந்து, சிவமணி (காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் லச்சுமிகாந்தனின் (ஜேர்மனி) சகலனும் நந்தினி (ஜேர்மனி), யோகீஸ்வரி, சரோஜினிதேவி, ஜெயராணி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரன் முறையானவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10-11-99) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் 8 (20), பீ. ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
A. குமாரசாமி
(மாமனார்)

8 (20), பீ. ஏ. தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(70810)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு இன்று

## பாகிஸ்தானின் உறுப்புரிமை பறிக்கப்படலாம்

ஜொகனஸ்பேர்க், நவ. 9

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு இன்று தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் ஆரம்பமாகின்றது.

இந்த அமைப்பின் உறுப்பு நாடான பாகிஸ்தானின் உறுப்புரிமை இந்தக் கூட்டத் தொடரில் வைத்து நிரந்தரமாகப் பறிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இராணுவம் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து அண்மையில் நடைபெற்ற பொது நலவாய அமைப்பு அமைச்சர்களின் மாநாட்டில் பாகிஸ்தானின் உறுப்புரிமை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பொதுநலவாய அமைப்பு கோரியுள்ளது- இது குறித்து பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்களுடன் பேச்சு நடத்துவதற்கென அமைச்சர்கள் மட்டக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

பாகிஸ்தான் சென்ற இக்குழு இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப்புடனும் ஏனைய அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ உயரதிகாரிகளுடனும் பேச்சு நடத்தியது. எனினும் இந்தப் பேச்சுக்கள் சுமுகமாக அமையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சி குறித்து இந்த அமைச்சர்கள் மட்டக்குழு தயாரித்த அறிக்கை இன்றைய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இராணுவ ஆட்சியாளர்கள் பாகிஸ்தானில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான காலக்கெடு ஒன்றை விரைவில் வெளியிட வேண்டும் என்றும் —

அவ்வாறு வெளியிடப்படாத பட்சத்தில் பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பில் இருந்து நிரந்தரமாக விலக்கி வைக்கப்படும் என்றும் —

முன்னர் அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய இன்று ஆரம்பமாகும் கூட்டத்தொடரில் பாகிஸ்தானை அமைப்பில் இருந்து நிரந்தரமாக இடை நிறுத்தும் அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-6)

## பாப்பரசர் ஜோர்ஜியா பயணம்

புதுடில்லி, நவ. 9

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தனது இந்தியாவுக்கான இரண்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை ஜோர்ஜியாவுக்கு புறப்பட்டார்.

பாப்பரசரின் விஜயம் மகிழ்ச்சியானதாகவும், சுமுகமாகவும் நடைபெற்று முடிந்ததாக இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அஜித்குமார் பாஞ்சா தெரிவித்தார். பாப்பரசரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்துத் தீவிரவாத அமைப்புக்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்ததால் அவரது விஜயத்தின் போது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-6)

## செச்சினியாவில் பாகிஸ்தான் தீவிரவாதிகள்

மொஸ்கோ, நவ. 9

செச்சினியாவில் ரஷ்யபடையினரை எதிர்த்துப் போராடும் கிளர்ச்சியாளர்களுடன் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற 400 தீவிரவாதிகளும் சேர்ந்து கொண்டுள்ளதாக ரஷ்ய உளவுப்படை தெரிவித்துள்ளது.

(ஐ-6)

## காந்தீய ஈடுபாடுள்ள இந்தோனேசிய அதிபர்

வாஷிங்ரன், நவ. 9

இந்தோனேசியாவின் புதிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிப் ஒரு காந்தியவாதி என்று தெரிவிக்கப்படுகிறது. இவர் ஓர் இந்து ஆச்சிரமத்தில் மகாத்மா காந்தியின் சீடரிடம் பயின்றவர்.

அதிபராகப் பதவியேற்றுக் கொண்ட மூன்று நாள்களில் இந்தோனேசியாவில் உள்ள இந்து ஆச்சிரமம் ஒன்றில் நடந்த பிரார்த்தனையில் அப்துல் வாஹிப் கலந்து கொண்டார்.


"நான் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவன். எனினும் எல்லா மதங்களையும் நேசிக்கின்றேன்'' என்று வாஹித் தெரிவித்துள்ளார்.

காந்தியக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்ட ரஹ்மான் இந்தோனேசியாவில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது அதிபராவார்.

அத்துடன் சல்மான் ருஷ்டிக்கு ஈரான் தலைவர் அயத்துலலா கொமேனி மரண தண்டனை விதித்த போதும்— இஸ்லாமிய மதத்தை விமர்சித்து எழுதிய இந்தோனேசியப் பத்திரிகை ஆசிரியருக்கு சிறைத் தண்டனை விதித்த போதும்—

அவற்றைக் கண்டித்த இஸ்லாமியத் தலைவராக வாஹித் விளங்கினார்.

(ஐ-6)



உலகின் மிகப்பெரிய உல்லாசக் கப்பல் இது. இதன் பெயர் 'வெயகர் ஒப் தசீ றோயல் கரீபியன்' உல்லாசப் பயணக் கப்பல் நிறுவனத்தால் கட்டப்பட்ட இந்த மாபெரும் கப்பல் கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி அமெரிக்கா நோக்கிப் புறப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படம் இது. (ஐ)

## பங்களாதேஷில் ஹர்த்தால்

டாக்கா, நவ. 9

பங்களாதேஷில் அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக்கோரி எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கடந்த இரண்டு நாள்களாக நடத்தி வரும் ஹர்த்தாலினால் நாடு முழுவதும் ஸ்தம்பித்துப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் டாக்காவில் நேற்று முழு நாளும் கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் போக்குவரத்தும் ஸ்தம்பித்துப் போயிருந்தது. பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அலுவலகங்களில் ஊழியர்களின் வரவு மிகக்குறைந்தளவே காணப்பட்டது.

நேற்று முன்தினம் ஹர்த்தாலின் போது ஏற்பட்ட வன்முறைகளில் 3 பேர் உயிரிழந்தனர். 100- க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். நேற்றும் டாக்காவின் சில இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

பொலீஸாரும் துணை இராணுவத்தினரும் வன்முறைகளைத் தடுப்பதற்காக பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ-6)

உலக அரங்கில்

## கிளின்ரனின் பாகிஸ்தான் விஜயம் இடை நிறுத்தம்

நியூயோர்க், நவ. 9

பாகிஸ்தானில் நடைபெறும் இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டு அங்கு ஜனநாயகம் ஏற்படுத்தப்படும் வரை பாகிஸ்தானுக்கான விஜயத்தை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இடைநிறுத்தி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார். அதனைத் தொடர்ந்து அவர் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்வதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் பாகிஸ்தானில் இராணுவம் திடீர் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதனால் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பாகிஸ்தானுக்கான கிளின்ரனின் விஜயம் இடை நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் பல்வேறு விடயங்கள் குறித்து அமெரிக்கா பாகிஸ்தானுடன்தொடர்ந்து பேச்சு நடத்தும் என்றும அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஐ-6]

## ஷெரிப்பை விசாரிப்பதற்கு தனி நீதிமன்றம் அமைக்குக

### அவரது புதல்வர் கோரிக்கை

லண்டன், நவ. 9

பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் நாவஸ் ஷெரிப் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு இராணுவ ஆட்சியாளர்கள் சுதந்திரமான தனி நீதிமன்றம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று நவாஸ் ஷெரிப்பின் மகன் ஹசன் ஷெரிப் கோரியுள்ளார்.

லண்டனில் இருந்து கல்வி கற்றுவரும் ஹசன் ஷெரிப் செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனது தந்தை மீது அவரின் அரசியல் எதிரிகள் கடந்த காலங்களில் பல குற்றசாட்டுகளைச் சுமத்தினர். ஆனால் அவற்றை அவர்களால் நிரூபிக்கமுடியவில்லை. அதே போன்றே இப்போதும் தந்தை மீது நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எனது தந்தையை விடுவிக்கும் படி இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு நான் எந்தக் கோரிக்கையும் விடுக்க வில்லை. எனது குடும்பத்தினரின் நற்பெயரைக் கெடுப்பதற்காக பத்திரிகைகள் பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளன.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-6)

## 10 லட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை

### ஆயிரத்து 700 பேர் பலியானதாக உத்தியோக பூர்வ மதிப்பீடு

புதுடில்லி, நவ. 9

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் அண்மையில் வீசிய புயலால் ஏற்பட்ட பெரும் அனர்த்தத்தில் ஆயிரத்து 700 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஒரிஸா மாநில அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. எனினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்துள்ளன. ஆயிரத்து 750 கோடி இந்திய ரூபா பெறுமதியான பயிர்கள் நீரில் மூழ்கி அழிந்து போயுள்ளன

12 மாவட்டங்களைச் சேர்ந்த ஒன்றரைக் கோடி மக்கள் புயலால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல லட்சக் கணக்கானோர் தமது வீடுகளை இழந்துள்ளனர். அத்துடன் மேலும் ஆயிரம் கோடி இந்திய ரூபா பெறுமதியான பொருள்கள், தொழிற்சாலைகள் என்பவற்றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன.

புயலால் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மிகப் பின்தங்கிய கிராமங்களுக்கு உதவிப் பணியாளர்கள் செல்வது சிரமமானகாரியமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் சுமார் 10 லட்சம் மக்களுக்கு இன்னும் உதவிகள் போய்ச்சேரவில்லை என்று கூறப்பட்டது.

பாதிக்கப்பட்ட இடங்களில் தொற்று நோய்கள் பரவி வருவதாகவும் மாநில அரசு எச்சரித்துள்ளது.

(ஐ-6)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெறுள்ள எமது கழக ஆரம்பகாலத் தலைவர்

லயன் எஸ். பத்மநாதன்

(லயன்ஸ் பிராந்திய ஆலோசகர், மாவட்ட தலைமைத்துவ தலைவர்)

அவர்களது மக்கள் பணி லயன்ஸ் சேவைகள் மூலம் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
அங்கத்தவர்கள்.
மானிப்பாய் பரிஷ் லயனஸ் கழகம்.

(70806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### திருமணசேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் மணமகள், மணமகன் உண்டு. ஜாதகம், படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமணசேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (70802)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில, ஒரு வகுப்பில் 10 மாணவர் ள் மட்டும், தனித்தனி கவனம், குறுகிய காலத்தில் கதைக்க. ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 ,302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (70799)

### தவறிவிட்டது

மூக்குக் கண்ணாடி ஒன்று பருத்தித்துறை வீதியில் அரசடிச் சந்திக்கும் மாநகர சபை அலுவலகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எஸ். பரராஜசேகரம்,G.T. Zஇல: 11, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (70803)

### விற்பனைக்கு

தறிக்கப்பட்ட பனை மரக் குற்றிகள் ஒவ்வொன்றும் 12 முளம் நீளம், 3 குற்றிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பொ. நாகலிங்கம், 142,இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (70801)

பரராசசேகரம் சுரோக நிதானம்ஓர் அரிய வைத்திய நூல்விளக்கவுரையுடன் பிரதி ஒன்றின் விலை ரூபா 110. கிடைக்குமிடம்: 127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (70749)

## யுவதி கைது

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். கடலேரி ஊடாக வன்னியிலிருந்து வந்து குருநகர் இடைத்தங்கல் முகாமில தங்கியிருந்த யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

6 ஆம் வட்டாரம் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சண்முகலிங்கம் உதயலீலா (வயது 21) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 512 ஆவது படைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-5)

---

## மொடேன் கல்வி நிலையம்

**A/L 99**

**வர்த்தகப் பிரிவுக்கான மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்**

பொருளியல்: திரு. லோகசிங்கம் 6 — 8 a. m.

கணக்கியல்: திரு. பவான் 7 — 8 a. m.

வணிகக்கல்வி: திரு. முகுந்தன் 8 — 9 a. m.

ஆரம்பம்: 10 – 11 - 1999

நெல்லியடி, கரவெட்டி.

(சி/9758)

---

## இரண்டாம் ஆண்டில் நெஞ்சம் சுமக்கும் நினைவுகள்



**திருமதி தர்மராசா கனகாம்பிகை**

மலர்வு 13 - 04 – 1935 உதிர்வு 02 – 11 – 1997

திதி: 09 - 11 - 1999

குடும்பத்தின் குலவிளக்காய்
நேசத்தின் திருவுருவாய்த் திகழ்ந்த
எம் அன்புத் தாயே!
உங்கள் நினைவுகள் காலங்கள்
நகர்வதால் மறந்திடல் இல்லை
என்றும் பசுமையாய் எம்
நெஞ்சம் சுமக்கும் நினைவுகளாகும்.

உங்களையே நிதம் தேடும்
கணவர், பிள்ளைகள்.

பிளாக் வீதி,
சங்கானை.

(70807)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**காரைநகர்**

**யாழ்ற்றன் கல்லூரியில்**

**5 ஆம் தரப் புலமைப் பரீட்சையில்**

சித்தியடைந்த எமது கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களான

**கிருபாகரன் சுரேஸ்குமார் – 141 புள்ளிகள்**
**விஜயகுமார் பாமினி - 136 புள்ளிகள்**

ஆகியோரையும் இதே கல்லூரியில் சித்தியடைந்த மற்றைய மாணவர்களையும் வாழ்த்திப் பாராட்டுவதுடன் இவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத
ஸ்ரீ சிதம்பரேஸ்வர தேவஸ்தான
பரிபாலன சபையினர்

[சி/9761]

---

## வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்தவரும் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்ட, பிராந்தியம் 8 இன் பார்வைக்கு முதலிடம், சுகாதாரம் ஆகிய பிரிவுகளின் மாவட்டத் தலைவருமான

லயன் டாக்டர்

**எஸ். எஸ். அருளானந்தம்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

இந்திரன் ஜுவலர்ஸ்
இல. 10. சிறப்பு அங்காடி, சாவகச்சேரி

(சி/9765)

---

## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அதிபர்

உயர்திரு. ஆர். எஸ். நடராஜா அவர்களின் மனைவியார்

திருமதி

**சிவயோகரத்தினம் நடராஜாவின்**

மறைவு கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைகிறோம், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்.
ஆசிரிய மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

பலாலி ஆசிரிய கலாசாலை.

(70809)

---

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1976 — 11 — 16



மறைவு 1999 — 11 — 05

**செல்வன் கந்தசாமி ஜெனாற்**

(1995 உயிரியல் பிரிவு மாணவன்,
யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி;
அம்பலவாணர் வீதி, உடுவில்)

தூரத்து தேசத்திலே உயிர் தொலைந்து போன
நண்பனே!
ஊருறங்கும் வேளையிலும் எம் மனது துடிதுடிக்கும்
ஊர் சிரிக்கும் வேளையிலும் எம் மனது பரிதவிக்கும்
நீ இருந்த இடங்களெல்லாம் எம் மனது சுற்றி வரும்
நீண்ட வழி பார்த்திருந்து எம் கண்கள் பூத்திருக்கும்.

உடுவில் நண்பர்கள்.

(70798)

---



## சர்மலா தொலைத் தொடர்பு நிலையம்

## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் ஐப்பசி மாதம் 23 ஆம் திகதி இன்று[09-11 99] செல்வாய்க்கிழமை பகல் 10. 35 — 12. 05 மணியளவில் வரும் சுபவேவையில்

## சர்மலா தொலைத் தொடர்பு நிலையம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்பசகிதம் சமுகந்தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

தொலைபேசி இல. உள்ளூர்: 070 – 212672
வெளியூர்: 0094 – 70212672

திரு. திருமதி இ. [illegible] (தம்பு)

நாரந்தனை வடக்கு, தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.

(70805)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சிக்கு வந்தால் இரு ஆண்டுகள்

# வடக்கு-கிழக்கு நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைப்பேன்!

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு. நவ. 9

**வடக்கு – கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைத்து, அதன் நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பேன். இரு வருடங்கள் அந்தச் சபை மூலம் பிரதேசத்தை அவர்கள் நிர்வகிக்கும் நிலை ஏற்படும்.**

**ஐ. தே. க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இத் தகவலை வெளியிட்டுள்ளார்.**

கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து 'உதயன்' பிரதிநிதிக்கு கடந்த வியாழக்கிழமை(4ஆம் திகதியன்று) அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசாங்கம் வடக்கு — கிழக்கில் ஆலோசனைச்சபை ஒன்றை அமைக்கத் திட்டமிடுகின்றது நாம் ஆட்சிக்கு வந்ததும் வடக்கு— கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்போம்.

அந்தச் சபை மூலம் வடக்கு — கிழக்கில் உள்ள மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு இரண்டு வருடங்கள் வடக்கு — கிழக்கு நிர்வாகத்தை விடுதலைப்புலிகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

அதே நேரத்தில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை நடத்துவதுடன் தேர்தலுக்கும் ஏற்பாடு செய்யலாம். இந்தச் செய்தியை யாழ். மக்களுக்கு நான் விடுக்கிறேன்.

நான் ஆட்சிக்கு வந்ததும் 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பேன். பேச்சுக்களை ஆரம்பிக்க கால எல்லை விதிக்கமாட்டேன். இயன்ற வரை விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வேன்

மத்தியஸ்தர், ஏற்பாட்டாளர் என்று சண்டை பிடித்துக்கொண்டிராமல், இரு தரப்பும் ஒரு மேசைக்கு வர என்ன செய்யலாம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வராமல் இந்தப்பிரச்சினைக்கு எந்த வகையிலும் தீர்வு காண முடியாது

3 ஆம் தரப்பு மத்தியஸ்தம் செய்யும் ஒருவரை இந்தியாவின் ஆசியுடனேயே ஏற்பாடு செய்வோம். அந்த 3ஆம் தரப்பாக ஐரோப்பிய நாடு ஒன்று செயற்படலாம்.

பதவிக்கு வந்ததும் உடனடியாக வன்னிக்கான பொருளாதாரத் தடையை நீக்குவேன். சகல பொருள்களையும் கட்டுப்பாடு இன்றித் தாராளமாக அங்கு அனுப்புவோம்.

விடுதலைப்புலிகள் முகாம் முகாமாக கைப்பற்றி தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர். பொருளாதாரத் தடையால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் தான். ஆகவே அவர்களின் உணவுப் பிரச்சினைக்கு தீர்வுகாண வசதியாக சகல பொருள்களையும் அனுப்பி வைப்பேன்.

ஐ. தே. க. ஆட்சிக்காலத்தில் தான் இந்தப் பொருளாதாரத் தடை கொண்டுவரப் பட்டது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் பிரதமராக இருந்த இறுதி ஒரு வருட காலத்தில் இதுவிடயமாக எதுவும்செய்ய முடியவில்லை. இனி ஆட்சிக்கு வந்ததும் வன்னிக்கு மட்டுமல்ல சகல இடங்களிலும் உள்ள பொருளாதாரத் தடைகளை நீக்குவேன்.

ஆட்சிக்கு வந்ததும் யுத்தத்தை நிறுத்தி சமாதான சூழ்நிலையை உருவாக்குவோம். இன்றைய அரசு போன்று பயனற்ற இராணுவத் தீர்வை நாடமாட்டோம்.

இந்த யுத்த நிலையை முடிவுக்கு கொண்டுவர அரசிடம் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் நாம் உடன் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைத் தீர்வுக்கான செயல் திட்டங்களை முன்னெடுப்போம் என்றார்.

விடுதலைப் புலிகளுடன் மட்டும் தான் பேசுவீர்களா? அல்லது ஏனையோருடனும் பேசுவீர்களா? என்று கேட்டதற்கு, ''ஐ. தே. கவும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிதானே'' என்று பதில் அளித்தார்.

யாழ். மக்களை நேரடியாகச் சந்திக்க மிகவும் ஆவலுடன் இருக்கிறேன். பாதுகாப்பு அனுமதி கிடைத்தால நிச்சயம் அங்கு வந்து மக்களுடன் கலந்துரையாடுவேன் என்றும் அவர் தெரிவித்தார்.

[ஐ–உ–3]

## வாய்ச் சுகாதாரக் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, நவ. 9

தேசிய வாய்ச் சுகாதார தினம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நாளை புதன் கிழமை காலை 8-30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கில் பங்கு பற்றுவதற்குப் பொருத்தமான ஆசிரியரை அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் [நிர்வாகம்[ திருமதி றெ. இருதயநாதன் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## ஆசிரியைகள் சீருடையில்

வலி. வடக்கு, நவ 9

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள தெல்லிப்பழைப் பிரிவில் உள்ள மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியைகள் நேற்றைய தினம் சீருடை சேலை அணிந்து பாடசாலைக்குச் சென்றனர்.

பாடசாலை ஆசிரியைகளும் சீருடை அணிய வேண்டுமென்ற தீர்மானத்துக்கு அமைவாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஐ-86)

## நெடுந்தீவில் ஞாயிறன்று நடந்த சமாதான ஊர்வலம்

நெடுந்தீவு, நவ. 9

நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் எனக்கோரி நெடுந்தீவு கத்தோலிக்க மக்களினால் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஊர்வலம் நடத்தப்பட்டது.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு மொன்வொட் அடிகள் தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

மத்தி புனித யுவானியார், புனித சந்தியோகுமையர், புனித தொம்மையப்பர் தேவாலயங்களினதும் கிழக்கு புனித சவேரியார், புனித அந்தோனியார் தேவாலயங்களினதும் பங்கு மக்களுடன் புனித மரியன்னை தேவாலய பங்கு மக்களும் கலந்து கொண்ட இந்த ஊர்வலம் குறிப்பிட்ட தேவாலயங்களில் இருந்து புனித மரியன்னை தேவாலயத்தை வந்தடைந்ததும் அங்கு நாட்டின் சமாதானம் வேண்டி பங்குத் தந்தை மொன்வொட் அடிகள் சமாதானத்திற்கான திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுத்தார். (ஐ-111)

### ஐ. நா. தூதரக உதவியுடன்

## பளைப் பிரதேசத்தில் மேலும் நான்கு அபிவிருத்தித்திட்டங்கள்

தென்மராட்சி, நவ. 9

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் பளைப் பிரதேசத்தில் இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் மேலும் நான்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

கிளாலியில் பல நோக்குப் பொது மண்டபம், அரசர் கேணியில் இயங்கும் இயக்கச்சி அ.த.க. பாடசாலைக்கு வகுப்பறைத் தொகுதி ஆகியவை நிர்மாணிக்கவும —

பிரதேசத்தில் இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்யவும் —

பளைப் பிரதேசத்தில் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் பழுது பார்த்தல், வயரிங் வேலைகள் ஆகிய பயிற்சி வகுப்புகள் நடத்தவும்—

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே பளைப் பிரதேசத்தில் ஏழு அபிவிருத்தி வேலைகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம், நவ. 9

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் கந்தஷஷ்டி காலச் சொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 3 30 மணியளவில் 'தொண்டின் பெருமை' என்னும் தலைப்பில் ஆசிரியர் இ. இராகவன் உரையாற்றுவார். (க)

## கந்த புராணப் படிப்பு

கொழும்புத்துறை, நவ. 9

சரசாலை நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் கந்தஷஷ்டி காலங்களில் பகல் 12 மணி முதல் 3 மணி வரை கந்தபுராணப் படிப்பு இடம்பெறும். (க-30)

## குருபூசை

கொழும்புத்துறை, நவ. 9

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் மற்றும் இந்து இளைஞர் மன்றங்களில் நாளை புதன்கிழமை பூசலார் நாயனார் குருபூசை கொண்டாடப்படவுள்ளது.

(க-30)

## சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்

காரைநகர், நவ. 9

புங்குடுதீவு. நயினாதீவுப் பகுதி மக்களின் சுயதொழில்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிதியுதவியின் கீழ் புங்குடுதீவு — நயினாதீவு ப. நோ. கூ. சங்கம் கிராமியவங்கியூடாக 10 லட்சம் ரூபா கடனாக வழங்க உள்ளது.

இதில் முதற் கட்டமாக வியாபாரம் வாகனத்திருத்தம், அரைக்கும் ஆலை, விவசாயம் போன்ற துறைகளில் 12 [illegible]களுக்கு 2 [illegible] 35 [illegible] வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-73)

# செய்திக் கொத்து

## ஊழியருக்கு சீருடை

நெல்லியடி, நவ. 9

சுமார் 15 வருட காலத்தின் பின்னர், பருத்தித்துறை நகரசபையில் பணிபுரியும் சகல தர ஊழியர்களுக்கும் இவ்வருடத்திற்கான சீருடை வழங்கப்பட்டு வருகின்றது.

சீருடைகளை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வ. விஜயரட்ணம் மேற்கொண்டு வருகின்றார்.

(ஐ-109)

## மீனவருக்கு கடன் உதவி

அரியாலை, நவ. 9

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மீனவர்களுக்கான திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக பத்து மீனவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார். (ஐ-17)

## மலசல கூட வசதி

நெல்லியடி, நவ. 9

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 15 குடும்பங்களுக்கு இலவச மலசல கூட வசதியை பருத்தித்துறை நகரசபை வழங்கி உள்ளது.

[ஐ-109]

## மீன் சந்தைக் கட்டட வேலை பூர்த்தி

நெல்லியடி, நவ. 9

முப்பத்தேழரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் பருத்தித்துறை மீன் சந்தைக் கட்டட வேலைகள், முடிவுறும் தறுவாயில் உள்ளன.

விசேட மூலதன நிதியிலிருந்து அமைக்கப்பட்டு வரும் இக்கட்டடம் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் திறந்து வைக்கப்படுமென பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வ. விஜயரட்ணம் தெரிவித்துள்ளார். [ஐ-109]

## தண்ணீர்க் குழாய் அபகரிப்பு

அரியாலை, நவ. 9

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் பொதுமக்களின் வசதிகருதி அமைக்கப்பட்டிருக்கும் குடிதண்ணீர்த்தாங்கி விசமிகளால் சேதமாக்கப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த தண்ணீர்த் தாங்கியின் நீர் பெறும் குழாயை விசமிகள் இரவு நேரங்களில் கழட்டி அபகரித்துச் செல்வதாகவும் இதனால் மக்கள் குடிதண்ணீரைப் பெறமுடியாதுஇருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-17]

## பஸ்களில் ஜனாதிபதியின் படங்கள்

தென்மராட்சி, நவ. 9

ஜனாதிபதித் தேர்தலையொட்டி பஸ்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் வர்ணப் படங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

[ஐ-117)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

நெல்லியடி, நவ. 9

வரணிப் பகுதியில் திரியும் கட்டாக்காலி நாய்கள் இம் மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் நஞ்சூட்டி அழிக்கப்பட உள்ளதாக வரணி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். [ஐ-3-109]

## கட்டடம் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, நவ. 9

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூகநிலைய கட்டட புனரமைப்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு லட்சம் ரூபா செலவில் மேற்படி சனசமூக நிலைய கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இப் புனரமைப்புப்பணிகளுக்கான அடிக்கல் நடல் அண்மையில் தலைவர் சி. இரத்தினசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

(ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட-கிழக்கு விளையாட்டு வீரரிடையே ஒற்றுமைப்பாலம் உருவாகவேண்டும்

## விருந்துபசாரத்தில் புளொட் பிரமுகர்

யாழ்ப்பாணம், நவ. 9

'வடக்கு—கிழக்கில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு இடையில் ஒற்றுமைப்பாலம் ஒன்றை உருவாக்கத் தொடர்ந்து விளையாட்டு வீரர்கள் இங்கு வந்து விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்ற வேண்டும்'.

புளொட் அமைப்பின் அரசியல்துறை பிரமுகர் ராஜன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். கிரிக்கெட் சங்கம் ஏற்பாடு செய்த மாபெரும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற யாழ். வந்த மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களின் அணி வீரர்களுக்கும், யாழ். மாவட்ட அணி வீரர்களுக்கும் புளொட் அமைப்பு வழங்கிய இராப்போசன விருந்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:—

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள விளையாட்டு வீரர்கள் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆட்டங்களில் பங்குபற்றியுள்ளனர். மாகாண மட்டத்தில் சிறந்த வீரர்களை உருவாக்க இது போன்ற ஆட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படவேண்டும்.

இதன் மூலம் தேசிய மட்டத்தில் எமது வீரர்களும் ஆட்டங்களில் விளையாட வாய்ப்புக் கிட்டும் — என்றார்.

அணிகளின் தலைவர்கள் நன்றி தெரிவித்தனர்

[ஐ-3]

## பட்டியல் மூலம் நிவாரண விநியோகம்

வலி. வடக்கு, நவ. 9

73 'ஏ', 'பி' புள்ளிகளுக்கான நிவாரணம் பட்டியல் மூலம் வழங்கப்படவுள்ளது.

72 'ஏ', 'பி' புள்ளிகளுடன் நிவாரண முத்திரை முடிவடைந்ததைத் தொடர்ந்தே முத்திரை அடித்துண்டையும் கிராம அலுவலர்களின் பட்டியலையும் கொண்டு நிவாரணம் வழங்க பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

(ஐ-86)

### வலிகாமம் வலயத்தில் 2ஆவது பட்டியல்

## தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்று முதல் நேர்முகப் பரீட்சை

வலிகாமம் தெற்கு, நவ.9

வலிகாமம் கல்வி வலயத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கான இரண்டாவது பட்டியல்படி நேர்முகப் பரீட்சைகள் நாளை முதல் மூன்று தினங்கள் நடைபெற உள்ளன.

ஏற்கனவே முதல் கிடைத்த பட்டியலில் குறிப்பிட்டவர்களுக்கானநேர்முகப் பரீட்சைகள் வலிகாமம் கல்வி வலயத்தில் நடந்து முடிந்துள்ளன.

இரண்டாவது பட்டியல் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதல் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாமலும், இம்முறைநடைபெறும் பரீட்சைக்கு அழைப்பு கிடையாமலும் எவராவது தொண்டர் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தால் அவர்களையும் 12 ஆம் திகதி அனுப்பி வைத்தால் அவர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என வலயக் ல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## விவசாய ஆசிரியருக்குப் பயிற்சி

வலிகாமம் தெற்கு, நவ. 9

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய ஆசிரியர்களுக்கான பாடசாலைத் தோட்டத்திட்ட ஐந்தாவது சேவைக்காலப் பயிற்சி வகுப்பு இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய உயிரியல்துறை விவசாய பீடத்தில் நடைபெறவுள்ளது.

காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு பற்றிய விடயங்கள் இப்பயிற்சியின் போது வழங்கப்படும். பாடசாலைகளில் விவசாயப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டு பயனடையுமாறு பட்டினிக்கெதிரான நிறுவனம் அறிவித்துள்ளது.

[ஐ-152]

# காரைநகரில் நெற்செய்கை கட்டாக்காலிகளால் அழிவு

காரைநகர், நவ. 9

காரைநகரில் காலபோக நெற்செய்கை கட்டாக்காலி மாடுகளால் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு, நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் கால்நடை உரிமையாளர்கள் ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்காமையால் அவை வேலிகளைப் பிரித்து உட்சென்று பயிர்களை மேய்கின்றன.

இதேவேளை —

வயல்களில் நாற்றுக்களும் திருடர்களால் களவாடப்படுகின்றன. வேலுப்பிள்ளை கந்தையா எனபவருடைய வயலில் பெருந்தொகையான நாற்றுக்கள் அண்மையில் திருடப்பட்டுள்ளன.

[ஐ-73)

### வலிகாமம் வலயத்தில்

## 3 ஆம் தவணைப் பரீட்சை வலய மட்டத்தில் நடக்கும்

வலிகாமம் தெற்கு, நவ. 9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் வலய மட்ட பொதுப் பரீட்சைகளாக நடைபெற உள்ளன.

4, 5, 10, 11 ஆம் தரங்களுக்கு மட்டும் இப் பொதுப் பரீட்சைகள் நடைபெறும். ஏனைய தரங்களுக்குக் கணிப்பீட்டுப் பரீட்சைகளே நடைபெறும்.

இம்மாதம் 23 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதிவரை இப்பரீட்சை நடைபெறும்.

[ஐ-152)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவருக்கு ரூ. 3 லட்சம் அபராதம்

நெல்லியடி, நவ, 9

சட்டவிரோதமாக, கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட மூவருக்கு எதிராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மூன்று லட்சம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராசா உத்தரவிட்டார்.

அல்வாய் மேற்கு கட்டைப் புளியடியைச்சேர்ந்த பொன்னையா — கெங்காதரன் (வயது 38) என்பவருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் —

வதிரி அல்வாயைச் சேர்ந்த சித்திரவேலு விஜயகுமார் (வயது 35) என்பவருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் —

இதே இடத்தைச் சேர்ந்த நமசிவாயம்- தெய்வேந்திரன் (வயது 35) என்பவருக்கு 60 ஆயிரம் ரூபாவும் —

அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-109)

## வைத்திய வசதிகள் இன்றி பன்னாலை கிராம மக்கள்

வலிகாமம் தெற்கு, நவ. 9

பன்னாலை கிராமத்தில் இயங்கி வந்த நடமாடும் வைத்தியசாலை செயற்பாடுகள் ஸ்தம்பித்தமையினால் இப்பகுதி மக்கள் வைத்திய சிகிச்சைகளுக்காக தூர இடங்களுக்குச்சென்றுஅலைய வேண்டி உள்ளது.

மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்ட இப்பகுதியில் கணிசமான அளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளமையால் அவர்களுக்கான வைத்திய தேவைகளும் அதிகரித்துள்ளன.

நீண்ட காலம் மக்கள் இங்கு தங்கி இராமை காரணமாக இப்பகுதிகள் பற்றைகள் நிறைந்தும், அழுக்குகள் சேர்ந்தும் பல்வேறு நோய்களை மக்கள் மத்தியில் பரவச் செய்துள்ளன.

நுளம்புகளின் பெருக்கமும் இங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஐந்தாம் கிளைக் கட்டடத்தில் மக்கள் இடம்பெயர முன்னர் இந்த நடமாடும் அரசினர் வைத்தியசாலை இயங்கி வந்தது.

மேற்படி வைத்தியசாலை நடவடிக்கைகளைக் கூடிய விரைவில் மீண்டும் இங்கு ஆரம்பித்து மக்களுக்கு வைத்திய சேவை கிடைக்கச் செய்யுமாறு இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (ஐ-152)


இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்

CEDRIC

மண்ணெண்ணெய் கேஸ் குகர்

- சிலிண்டர் தேவையில்லை
- கேஸைப் போன்ற நீலச்சுவாலையுடன் எரியக்கூடியது.
- மணம் இல்லை. கரிபிடிக்காது. காற்று அழுத்தம் தேவையில்லை.

3750/= மட்டுமே

தொலைபேசி இல. 323223

98, Braybrook Place, Colombo 02.

தலைமை அலுவலகம்

172, Kensington Church Street, Kensington, London. W8 BN

Tel: 0171792 1881 (10 Lines) Fax: 0171 243 8034



ஏஜண்டுகள் தேவை

[சி/9756]



## நன்றி நவிலல்

26-10-99 அன்று கொழும்பில் இறைவனடி எய்திய எங்கள் குடும்பத் தலைவர்

**சுவாமிநாதன் ஸ்ரீ பாஸ்கரன்**

அவர்களின் இறுதிக் கிரியைகள் மல்லாகத்தில் நடைபெற்றபோது அதனில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பான்ட் வாத்தியத்துடன் விளையாட்டு மைதானம் வரை வந்த மாணவ மாணவிகளுக்கும், சாரணர்களுக்கும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பிரதேச சபையினர் ஆகியோருக்கும் கொழும்பு தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபோது பணி புரிந்த மருத்துவர், தாதிமார் ஆகியோருக்கும் கொழும்பில் இருந்து போக்குவரத்து உதவிகள் செய்துதவிய கூட்டணி உறுப்பினர்களுக்கும், படைத் தளபதிகளுக்கும், வேறு பல வகையிலும் உதவிய ஏனைய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன்

மல்லாகம். [70778)



## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**நாகமுத்து சிவப்பிரகாசம்**

(அம்பாள் மில் உரிமையாளர்)

பிறப்பு

05 – 02 – 1918

இறப்பு

03 – 11 – 1986

திதி: 09 – 11 – 1999

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி

(70800)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★★★★★★★★★★★

யா/கரணவாய்

**மணியகாரன் தோட்டம் த. வி.**

**புலமைப் பரிசில் பரீட்சை -- 1999**

| | |
|---|---|
| கு. கசன் | -- 132 புள்ளி |
| க. சறஞ்ஜா | -- 127 புள்ளி |
| சு. கலைச்செல்வி | -- 118 புள்ளி |

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற இம் மூவரையும் வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற கீழ்க் கண்ட இருவரையும் பல்கலையும் கற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| பி. மதுஷா | -- 117 புள்ளி |
| சி. விதுஷா | -- 106 புள்ளி |

இவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து கல்வி அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள் பல.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்
நலன் விரும்பிகளும்.
யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் த. வி.

(சி/9757)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## நட்டம் அவர்களுக்கே!

அரசாங்கத் தரப்பினரும் — ஜனாதிபதி சந்திரிகாவும் — எதிர்க்கட்சித் தரப்பினரும் — எதிர்கட்சித் தலைவர் ரணிலும் — இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இப்போது கூறுகின்றனர்.

இதற்கான காரணம் சகலருக்கும் தெரிந்ததே. ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ளதால் அதில் வெற்றி பெறுவதற்குத் தமிழர்களின் வாக்குகள் அவசியம் தேவைப்படுகின்றன என்பதே அக்காரணமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமைக்கு அடுத்த தரப்பே காரணம் என்று இரண்டும் மாறி மாறிக் குற்றஞ்சாட்டி வருகின்றன; அறிக்கைகளை வெளியிட்டும் வருகின்றன. இரண்டு தரப்புகளுமே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் அக்கறையுடனும் உண்மையுடனும் உழைக்கவில்லை என்பதே உண்மை.

ஆனால் இப்போது இருதரப்புகளும் மாறி மாறி அடுத்த தரப்புக்குக் கடிதமும் பதிலும் எழுதி வருகின்றன. இந்தக் கடிதப் பரிமாற்றத்தை ஜனாதிபதி சந்திரிகாவே கடந்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார். அந்தக் கடிதம் அரசியல் லாபம் நாடி எழுதப்பட்டிருந்ததை சாமானியர்களும் அவதானிக்க முடிந்தது. இம்மாதம் முதலாம் திகதி எழுதிய கடிதத்தில் ரணிலுக்கு இனிக் கடிதம் எதுவும் எழுதப் போவதில்லை என்று சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமல்ல ரணிலின் ஒத்துழைப்புக்குத் தாம் இனிக் காத்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்றும், உரிய வேளையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்போவதாகவும் ஜனாதிபதி தமது கடைசிக் கடிதத்தில் எழுதியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என்பது எந்த வகையிலும் தவிர்க்க முடியாத ஒன்று.

அவ்வாறிருக்க, அரசாங்கம் அதில் உரிய அக்கறை காட்டாமல், ஏனோ தானோ என்று காலத்தைக் கடத்தி வந்தது. நேரத்துக்கு நேரம் மாறுபட்ட நிலைப்பாட்டுடன் காலத்தைப் போக்கியது. இது விடயத்தில் எதிர்க்கட்சிக்கும் பங்குண்டு. அது தீர்க்க சிந்தையுடன் செயலாற்றி இருப்பின் ஆளுந்தரப்பு குற்றம் சுமத்த இடமிருந்திருக்காது.

அரசாங்கம் இப்போது உரிய வேளை வரும் போது விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்போவதாகக் கூறுகிறது. இனிச்செய்யப் போவதை முன்னரே செய்திருக்கலாம் அல்லவா?

கடந்த மாதம் வரை — இந்துப் பத்திரிகைக்குப் பேட்டி வழங்கும் போதும் — மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்த ஜனாதிபதி, உரிய நேரம் வரும் போது விடுதலைப் புலிகளுடன் எவ்வாறு பேச உத்தேசித்திருக்கிறார். மத்தியஸ்தத்துடனா அல்லது எவரது உதவியும் இன்றி நேருக்கு நேர் பேசலாம் என்ற நினைப்புடனா உரிய வேளையைக் கணக்கிட்டுள்ளார்?

தேர்தலை முன்னிட்டு எதையாவது கூறி வாக்கு வாங்கினால் போதும் என்ற நோக்கோடு இனிமேலும் செயற்பட்டால் அரசியல்வாதிகளுக்கே அதிக நட்டமாக அமையும்.

## தொகுதிகள் தோறும் 100 வீடுகள்
# பயனாளிகளைத் தெரிவு செய்யுமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிப்பு

வலி. வடக்கு. நவ. 9

2 ஆயிரம் ஆண்டில் தொகுதிகள் தோறும் நூறு வீடுகள் நிர்மாணிப்பதற்கு வசதியாக பயனாளிகளைத் தெரிவு செய்யும்படி பிரதேச செயலகங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகாரசபை இந்த வீட்டுத் திட்டத்தின்படி ஒவ்வொரு வீட்டிற்கும் 30 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்க உள்ளது.

வட பகுதி மீள்குடியேற்ற புனர்நிர்மாண புனர்வாழ்வு அதிகாரசபை வழங்கும் 25 ஆயிரம் ரூபாவையும் — உள்ளடக்கியே இந்த வீட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

காணி சொந்தமாக வைத்திருப்பவர்களே இத் திட்டத்தில் பயனாளிகளாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

(ஐ-86)

## மட்டுவிலில் பெண் கைது

யாழ்ப்பாணம், நவ. 9

மட்டுவில் தெற்குப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குமுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஐயாத்துரை செல்வராணி (வயது50) என்பவரே கைது செய்யப்பட்டவராவார் இவர் தற்பொழுது காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்புப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒன்றினைத் தொடர்ந்தே இந்தப் பெண் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## இடம் பெயர்ந்த குடும்பங்கள்:
# புதியவர்களைதேர்தல்இடாப்பில் பதிவு செய்ய விசேட வசதி

யாழ்ப்பாணம், நவ. 9

இராணுவ நடவடிக்கை காரணமாக சொந்த இடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களில் குடியமர்ந்துள்ள மக்கள் தாம் தற்சமயம் வாழும் கிராம அலுவலர்கள் மூலமாக தமது பழைய தேர்தல் இடாப்பில் புதிய தேர்வாளர்களையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான அறிவித்தல்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் தற்சமயம் தாம் வதியும் கிராம அவலுலரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று தமது சொந்த இடங்களுக்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

## பாடசாலைகளுக்கான
# தொலைபேசி,மின் கட்டணத்தில் பகுதியைதிணைக்களம்வழங்கும்

வலிகாமம் தெற்கு, நவ. 9

பாடசாலைகள் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான கொடுப்பனவுகளையும், பாடசாலைகளில் பயன்படுத்தும் தொலைபேசிகளின்மாதாந்த கட்டணத்தின் ஒரு பகுதியையும் கல்வித்திணைக்களம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கமைய வலிகாமம் கல்விவலயத்தில் மின்சார வசதிகளைக் கொண்ட பாடசாலைகளும், தொலைபேசி வசதிகளைக் கொண்டுள்ள பாடசாலைகளும் தமது செலவு விவரங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

(ஐ-152)

# கையெழுத்துச் சஞ்சிகை போட்டியில் மாணவர் ஆர்வம்

வலிகாமம் தெற்கு, நவ,9

உடுவில் கல்விக் கோட்டத்தினரால் பாடசாலைகளுக்கிடையே பாலர் பிரிவு இடைநிலைப் பிரிவுகளிடையே ஐந்து நிலைகளில் நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகளின் ஐந்து நிலைகளிலும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்திபாசாலை முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

பாலர் பிரிவு, பாலர் மேற்பிரிவு, இடை நிலைப் பிரிவு 1, 2, 3 ஆகிய பிரிவுகளில் இப்பாடசாலை மாணவர்களின் தயாரிப்புக்களான 'சூரியகாந்தி', 'சுவடு', 'வளர்பிறை', 'வானம் பாடி', 'தளிர்' ஆகிய ஐந்து சஞ்சிகைகளுக்கும் முதலிடம் கிடைத்துள்ளன,

கல்லூரி நிலைப் பிரிவுப் போட்டியில் இராமநாதன் கல்லூரி (தீபம்). ஸ்கந்தவரோதயக் கல்லூரி (அறிவுக் கணனி), இணுவில் மத்திய கல்லூரி] தாமரைத்தடாகம்], என்பன முதல் மூன்று இடங்களையும் முறையே பெற்றுள்ளன.

அதேவேளை —

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையே கோட்ட மட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்ட சைவசமயத் 'தொண்டுபடும் செய்முறை' ப்போட்டியிலும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்கள் ஐந்து முதலிடங்களையும் இரண்டாம் இடம் ஒன்றையும் பெற்றுக் கொண்டனர்.

இணுவில் மத்திய கல்லூரிக்கு நான்கு முதலிடங்களும், மயிலணி சைவ வித்தியாலயத்துக்கு மூன்று முதலிடங்களும் கிடைத்துள்ளன.

தரம் மூன்று தொடக்கம் தரம் 13 வரை இப்போட்டிகள் இடம் பெற்றன.

(ஐ-152)

# தென்னை பயிரிட இது உகந்தகாலம்

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் தென்னை பயிரிடுவது தொடர்பாக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் விடுத்துள்ள ஆலோசனைக் குறிப்புகள் இங்கே பிரசுரமாகுகின்றன,

தற்போது மழைகாலம். ஆகையால் வீட்டுத் தோட்டத்திலும், பெரிய அளவிலான தோட்டங்களிலும் புது நடுகை, மீள், கீழ் நடுகையாகவும் தென்னங்கன்றுகளை நடலாம்.

தென்னைகளில் உயரினம், கலப்பினம் (DXT), செவ்விளநீர் இனம் என்பன எமது பிரதேசங்களில் நடக்கூடிய பொருத்தமான இனங்கள் ஆகும். கலப்பின செவ்விளநீர் இன தென்னங்கன்றுகளை குறிப்பாக வீட்டிலே 3 அல்லது 4கன்றுகளை நட்டு சிறந்த முறையில் பராமரிப்பதன் மூலம் முறையே 3, 5 வருடங்களில் விளைவினைப் பெறமுடியும். கலப்பின வர்க்க தென்னங்கன்றுகளை நடும்போது ஈரலிப்பு எந்த நேரமும் இருக்கும் இடமாகத் தெரிவு செய்து, அதாவது கிணற்றை அண்டிய பகுதியில் நடுதல் வேண்டும். உயர் வர்க்கம் பெருந்தோட்டங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் நடலாம். இது பலன் தர 5 — 6 வருடங்கள் எடுக்கும்.

### தென்னை நடுகை முறை

நமது பிரதேசத்தில் அனேக மானவர்கள் தென்னங் கன்றினை பிழையாக நடுகின்றனர். தெனை சரியான முறையில், நடுதலின் தொழினுட்பம் கீழே தரப்படுகின்றது.

எந்த வர்க்கமான தென்னங்கன்றுகளாயினும் சரி நடுகை முறையில் வேறுபாடு இல்லை. நடுகை செய்வதற்குரிய காணியைத் தெரிவு செய்து துப்புரவாக்கி, நடுகைக் குழிகளைத் தயார்செய்தல் வேண்டும். நடுகைக் குழியின் அளவு மண் வகைக்கேற்ப வேறுபடும். தென்னைகளுக்கிடையில் ஊடு பயிர்ச்செய்கை செய்வதாயின், சதுர முறையில் இரண்டு தென்னைகளுக்கிடையேயான இடைவெளித்தூரம் 26அடி × 26 அடி ஆகவும், ஏனைய பிறவாயின் 22 × 22 அடி தூர இடைவெளியிலும் ஏக்கருக்கு முறையே 64. 90 கன்றுகளை நடலாம். மேற்குறிப்பிட்ட அளவுகளில் கூனி அடித்து நடுகைக் குழியின்னை வெட்டுதல் வேண்டும்

### நடுகைக்குழி தயாரித்தல்

நடுகை செய்யவேண்டிய இடங்களை அடையாளப்படுத்திய பின்பு, கிரவல் மண்ணுள்ள இடத்தில் 3 அடி × 3 அடி × 3 அடி நீள அகல ஆழத்திலும், மணல், இருவாட்டி மண்ணுள்ள தரையாயின் 2 அடி × 2 அடி × 2 அடி நீள அகல ஆழத்திலும் நடுகைக் குழிகளை வெட்டும் போது, மேற்படை மண்ணை ஒரு புறமாகவும், கீழ்ப்படை மண்ணை எதிர்ப்புறமாகவும் தரையில் போடவும். குழியின் அடியில் நிலக்கறையானைக் கட்டுப்படுத்த கிடைக்கக்கூடிய அளவு அடுப்புச் சாம்பல் இடவும் பின்பு, அடியில் இருபடை பொச்சு மட்டை அடுக்கவும். அழுத்தமான பக்கம் கீழ்ப் பக்கம் இருக்கத் தக்கவாறு அடுக்கவும். மேற்படை மண்ணுடன் பின்வருவனவற்றைக் கலக்க வேண்டும். இரண்டு கூடை மாட்டெரு அல்லது ஒரு கூடை ஆட்டெரு உடன் 5 கிலோ அடுப்புச் சாம்பல் இவையிரண்டும் கிடைக்காவிட்டால் அரைக் கிலோ தொடக்கம் 1 கிலோ அளவில் YPM (Young Palm Mixture) மண்ணுடன் கலத்தல் வேண்டும். பசளை கலக்கப்பட்ட மண்ணை மணல் தரையில் வெட்டப்பட்ட குழியில் $1\frac{1}{2}$ அடி ஆழத்திற்கும், கிரவல் தரையாயின் $2\frac{1}{2}$ அடி ஆழத்திற்கும் குழியை நிரப்புதல் வேண்டும். இந்தனை செயல் முறைக்கு முன்பு தென்னங் கன்றினை நடுதல் கூடாது.

### நடுகை முறையின் தொழில் நுட்பம்

நாற்றுகளுடன் கூடிய விதைத் தேங்காயினை நில மட்டத்திலிருந்து 1/2 அடிக்குக் கீழே நடுகைக்குழியிலுள்ள மண் மட்டத்தில் ஒரு பொழி மண்ணை மண்வெட்டியால கிடங்கின் நடுவில் வெட்டி எடுத்து அதனுள் தென்னங்கன்றினை நேராகவும், விதைத்தேங்காயின் மேற்பரப்பும், கிடங்கிலுள்ள மண் மட்டமும் சமனாக இருக்கத்தக்கவாறும், தண்டுப்பகுதியை முற்றாக மண்ணினுள் தாழ்க்காமலும் மண்ணை அணைக்கவும்.

எனவே மேற்குறிப்பிட்ட செய்முறையில் மழைகாலமுள்ள இவ்வேளையில் நடுதலின் மூலம் தென்னங்கன்றின் குருத்தழுகலைத் தடுத்து தென்னை நடுகையை மேற்கொள்ளலாம். மேலும், தென்னைச்செய்கை சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறுவதற்கு யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் நல்லூர் கமநல சேவைநிலையத்தில்புதன் கிழமைகளில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஐ)

## நாளை

ஐப்பசி 24

புதன்கிழமை

திதி: துதியை

முற்பகல் 1.19 வரை

நட்சத்திரம்: அனுஷம்

நண்பகல் 11. 52 வரை

சுபநேரம்: 4 35 — 6.05

ராகுகாலம்: 12.05 — 1.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரம்)

## உதயவாக்கு

தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் மனிதன் பேசுவானாகில் உலகில் முழு அமைதி நிலவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவது
# ஜனவரி முதல் இங்கு ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், நவ. 9
குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் யாழ். செயலகமோட்டார் வாகனத் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக மோட்டார் வாகனத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னாரைச் சேர்ந்த ஒருவர் பரீட்சகர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போது இவருக்கு சில மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் — இந்தப் பயிற்சி முடிவடைந்ததும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அவர் இங்கு சேவையில் அமர்த்தப்படுவார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை— இந்தப் பதவிக்கு யாழ்ப்பாணத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் அதற்கு இங்கிருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் 11 ஆம் தரத்திற்கான ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சைகள் யாவும் நேற்று ஆரம்பமாகின. எதிர்வரும் 17 ஆம் திகதி வரையும் மேற்படி பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இடைநிலை வகுப்புகளுக்குரிய தேர்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகி 29 ஆம் திகதி வரை நடைபெறும். ஆரம்பப் பிரிவுகளுக்குரிய தேர்வுகள் யாவும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## மக்கள் முகம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் கே. எம். செல்வரத்தினம் (B. A. Hons. [London] அவர்கள் யாழ். மாவட்ட பதில் நீதிவான் க. திருநாவுக்கரசு முன்னிலையில் 1 - 11 - 99 இல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயத்தில் 28 ஆண்டுகள் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனும் கொழும்பு அரசினர் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் முன்னாள் வடமொழி விரிவுரையாளருமாவார். அத்துடன் ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்துநாகரிகம் தொடர்பான பல துணை நூல்களை ஆக்கியுள்ளதுடன் கலாநிதி தியாகராசா ம. ம. வித்தியாலயத்தில் ஆங்கிலத் துறைக்குப் பொறுப்பாசிரியராகவும், உயர்தர மாணவர் மன்றத்தின் காப்பாளராகவும் பணிபுரிந்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

★ ★ ★ ★ ★



இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதான உத்தியோகத்தராகப் பணியாற்றும் பி. ஆர். யோசெப் நாடாளுமன்ற நடைமுறை மற்றும் நிர்வாகம் தொடர்பான பயிற்சியினை இந்திய நாடாளுமன்றத்தில் பெறுவதற்காக புதுடில்லி பயணமானார். விவசாயத் திணைக்களம், பதிவாளர் நாயகம் பணிமனை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு ஆகிய அரச திணைக்களங்களில் பணியாற்றிய இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவராவார். உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுத்துரை திருமதி மரியம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரரான யோசெப் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சிறந்த தேர்ச்சி பெற்றவராவார். [ஐ]

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம்6 ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

சங்கானை
(121436ஏ), (121436பி), (121609ஏ[, (121609பி), (123489ஏ), (123489பி), (123489சி), (123489டி], [123545ஏ], [125410ஏ], [125427ஏ].

சாவகச்சேரி
[120908ஏ], [120916ஏ], [120975ஏ], [120975பி], [120975சி], [123251ஏ], [123251பி], [123251சி], [123266ஏ], [123278ஏ], [123294ஏ], [123319ஏ], [123319பி], [126155ஏ], [126155பி], [126180ஏ],

யாழ்ப்பாணம்
[109220ஏ], [122484ஏ], [122484பி], [122599ஏ], [122599பி], [122671ஏ], [122671பி], [122671சி], [122819ஏ], [122819பி], [122876ஏ], [122876பி], 1 22876சி], [124503ஏ], 124528ஏ], [124544ஏ], [124546ஏ], [124578ஏ], [124578பி], [124622ஏ], [124622பி], [124637ஏ], [124709ஏ], [124722ஏ], [124726ஏ], [124747ஏ], [124764ஏ], [124764பி], [124764சி], [124764டி], [124764ஈ], [124764எவ்], [124794ஏ], [124795ஏ], [124807ஏ], [124826ஏ], [124849ஏ], [124851ஏ], [124851பி], [124920ஏ], [12495ஏ].

கோப்பாய்
(123105ஏ). (123105பி).

நல்லூர்
[109873ஏ], [117530ஏ), [117534ஏ], [[117535ஏ[, [117538ஏ], [117673ஏ[, [117689ஏ[, [117690ஏ[, [123494ஏ], [125342ஏ[, [125343ஏ], [125343பி[.

சண்டிலிப்பாய்
[115044ஏ], [121501ஏ[, [121501பி[, [121501சி], [121502ஏ], [121502பி[, ]121502சி[, [121665ஏ[, [121757ஏ], [123481ஏ], [123534ஏ], [125215ஏ], [125312ஏ], [125312பி[.

தெல்லிப்பழை
[121598ஏ], [123507ஏ], [125389ஏ].

உடுவில்
[125226ஏ], [1[illegible]], [125359பி[, [125370ஏ]. (க)

## செய்முறைப் பயிற்சிக் கண்காட்சி

தென்மராட்சி, நவ. 9
பட்டினி ஒழிப்பு இயக்கத்தினால் தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட காய்கறி, பழங்கள் பதனிடல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட யுவதிகளின் செய்முறைப் பயிற்சிக் கண்காட்சி எதிர்வரும் 12 ஆம் திகதி சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு ஆகிய மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் சாவகச்சேரி மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த 60 யுவதிகள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக பட்டினி ஒழிப்பு இயக்கப் பிரதிநிதி ஷெல்ரன் ஆகியோரும் கலந்து கொள்வர். [ஐ-117]

## கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 9
அறவழிப் போராட்டக் குழு நடத்தும் வடமராட்சி வலய அறவழி மழலைகள் கல்விப் பூங்காக்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி இம்மாதம் 21 ஆம் திகதி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அறவழித் தலைவர் வீ.ஜீ தங்கவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமி கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-5)

## பாடசாலை புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, நவ. 9
பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. கடந்த கால போர் அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்திருந்த மேற்படி பாடசாலைக் கட்டடத்தில் வகுப்புக்கள் நடத்த முடியாதிருந்தமையால் அப்பகுதியில் உள்ள தனியார் வீடு ஒன்றில் வைத்து வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டட புனரமைப்புப் பணிகள் நிறைவுற்றதும்கூடிய விரைவில் பழைய [illegible] நடத்த ஒழுங்குகள் செய்யப்படும். (ஐ-152)

# தொண்டா அனுதாப பதாகை: இரத்தினபுரி நகரில் தீக்கிரை!

கொழும்பு, நவ. 9
இரத்தினபுரி நகரில் அமரர் தொண்டமானுக்கு அனுதாபம் தெரிவித்துக் கட்டப்பட்டிருந்த பதாகைகளை வெட்டி வீழ்த்தி, தீயிட்டுக் கொளுத்திய மூவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 12 மணியளவில்இரத்தினபுரி நகர பிரதான வீதிவழியாக வந்த சுமார் 20 பேர் அடங்கிய குழுவினர் ''வடக்கில் ஆயிரக்கணக்கில் உயிரிழக்கின்றார்கள். இங்கு வெள்ளைக் கொடி போடுகிறீர்கள்'' என்று அமரர் தொண்டமானையும் தூசித்து விட்டு பதாகைகளை வெட்டித்தீயிட்டுக்கொளுத்தியுள்ளனர்.

அச்சமயம் அவ்விடத்திலிருந்த சப்ரகமுவ மாகாண சபையின் பிரதித் தலைவர் கணபதிப்பிள்ளை இராமச்சந்திரனின் நிர்வாகச் செயலாளர் வீ எஸ். கவிதாசன் துரிதமாகச் செயற்பட்டு பிரதித் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அவர் உடனடியாக இரத்தினபுரிப் பொலீஸாருக்கு அறிவித்து பொலீஸாருடன் அவ்விடத்துக்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார்.

சந்தேக நபர்கள் தப்பியோடிய போதும் பொலிஸார் மூவரைக் கைது செய்துவிட்டனர்.

இதேவேளை— அன்றைய தினம் இரத்தினபுரி குகேல்வத்தையில் தமிழர்களுக்குச் சொந்தமான இரண்டு மோட்டார் சைக்கிள்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுக் கிடந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இச் சம்பவங்களின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்காக பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-க)

## வாசகர் திருமுகம்

### அடிப்படைக் காரணம்

யாழ்ப்பாண பஸ் நிலையத்தினுடைய நிலை குறித்துப் பல முறை பத்திரிகைகளில் செய்தி வருவதுண்டு. அண்மையில் உதயனில் ஆசிரியர் தலையங்கம் கூட எழுதப்பட்டிருந்தது. யாழ் பஸ் நிலையமும் அது போன்ற தெருச் சீர்கேடுகளும் மக்களைப் பெரும இன்னல்களுக்கு ஆளாக்குகின்றன. இவை மட்டுமல்ல இது போன்ற பல விடயங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன.

இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் எமது பகுதி நிர்வாக அதிகாரிகளின் திறமையின்மையே தவிர வேறொன்றுமில்லை. பணப் பற்றாக்குறை முதற்கொண்டு பல காரணங்கள் இவர்கள் கூறினாலும் கூட அவற்றைவிட எமது திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிலுள்ள குறைபாடே இதற்கு முக்கிய காரணம்.

கல்வியில் பெரிதும் முன்னேற்றமடைந்தவர்களாகக் கருதப்படும் எமது மக்கள் இப்படியானவற்றைக் கையாளுவதற்குரிய திறமை இல்லாமலிருப்பது விசனத்திற்குரியது. அதிகாரிகளின் திறமையின்மையால் எமது பகுதிக்குத் தொடர்ந்தும் பல இடர்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உதாரணங்கள் சில: ஒரு சாதாரண கழிவு நீர் வாய்க்காலைக் கூடச் சரிவரப் பேணமுடியவில்லை. ஐ. நா. உதவித் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட திருநெல்வேலிச் சந்தையை உரியபடி பயன்படுத்த முடியவில்லை. வைத்தியசாலையைச் சுத்தமாக வைத்திருக்க முடியவில்லை.

பொதுமக்கள் இவ்விடயங்களில் அக்கறை காட்டி அதிகாரிகளைத் திருத்த முயன்றால் சிலவேளை பயன் கிடைக்கலாம்.

வை. சந்திரபாலன்
கொக்குவில்.

### மருந்தாளர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணத்தில் மருந்தாளருக்குப் பெரும்தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் மருந்தகங்கள் (பார்மஸிகள்) மருந்தாளர் இன்றி இயங்கும் அவலம் நிலவுகிறது. இக்குறையை நிவர்த்தி செய்வதற்குத் தனியார் முயற்சி செய்து மருந்தாளர் பயிற்சி நெறியை நடத்துவது பாராட்டப்பட வேண்டியதாகும். இந்த முயற்சி, யானைப்பசிக்குச் சோளப் பொரி கொடுத்தமைக்கு நிகரானது. சுகாதாரத் திணைக்களமும் தனது பொறுப்பை உணர்ந்து மருந்தாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அண்மையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கட்டடம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கு வருகை தந்திருந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ்.ஜெகநாதனிடம் இவ்விடயத்தை எடுத்துரைத்தேன்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் உதவி செய்ய முன்வந்தால் மருந்தாளர் பயிற்சியை இங்கு நடத்தலாம் என அவர் கூறினார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் இதற்கு வேண்டிய உதவியைச் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கி, மருந்தாளர் பயிற்சி யாழ்ப்பாணத்திலும் இடம்பெற வழிவகுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

ச. ஆ. கோபாலமூர்த்தி
திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக் காரணங்களால் யாழ்ப்பாணம் வர முடியவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 9

''யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக வந்து மக்களைச் சந்திக்க எனக்கு விருப்பம். ஆனால் பாதுகாப்பு நிலைமை காரணமாக நேரடியாக அங்கு வரமுடியாததால் செய்மதி மூலம் உங்களுடன் உரையாட விரும்புகிறேன.''

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

செய்மதி மூலம் பொதுமக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் திட்டத்தின் கீழ் யாழ். மக்களின் கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கும் நிகழ்ச்சி ஒன்று பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இந்தநிகழ்ச்சியில் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன, வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என. கே. ஒபடகே, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் கேட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி அளித்த பதிலகள் வருமாறு:-

★ வடக்கு—கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்துக்கென இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது குறித்து ஏற்கனவே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் சகல கட்சிகளதும் பிரதிநிதிகள் இந்த இடைக்கால நிர்வாக சபையில் இடம்பெறுவர். இவர்களுடன் மாகாண ஆளுநரும் இணைந்து செயற்படுவார்.

இன்னும் ஒரு சில வாரங்களுக்குள் இந்த இடைக்கால நிர்வாகசபை இயங்கத் தொடங்கும்.

★ யாழ்ப்பாணத்துக்கும் – கொழும்புக்கும் இடையிலான போககுவரதது பெரும் பிரச்சினையாகவுள்ளது என்பதை அறிகிறேன். இந்தப் போக்குவரத்தில் ஈடுபட்ட சில விமானங்களை விடுதலைப் புலிகள் அழித்து விட்டார்கள். மேலும் சில விமானங்கள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வீழ்ந்து நொருங்கி விட்டன. எனவே கப்பல் போக்குவரத்தினை ஆரம்பிப்பதற்கென புதிய கப்பல்களைக் கொள்வனவு செய்யவுள்ளோம். இன்னும் இரண்டு மாதகாலத்துக்குள் யாழ்ப்பாணத்துக்கான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுவிடும்.

★ யாழ்ப்பாணத்துக்கு இராணுவம் சென்ற பின்னர் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன இராணுவத்தில் இருக்கக்கூடிய பைத்தியக்காரத்தனமான சில வீரர்களின் நடவடிக்கைகளினால்தான் இவ்வாறான அசம்பாவிதங்கள் இடம் பெற்றுள்ளன இந்தச் சம்பவங்களில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது சாதாரணமான வழக்கு ரீதியாக நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் 'ரயல் அட் பார்' முறை மூலம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அத்துடன் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபடவேண்டாம் என படையினருக்கு உத்தரவும் பிறப்பித்துள்ளோம்.

★ வடபகுதியில் குறிப்பாக யாழ். மீனவர்களுக்கு கடற்றொழில் அமைச்சின் உதவியுடனும் வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபை மூலமும் உதவிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் யாழ். மீனவர்கள் கடலில தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படும் தூரமும் அதிகரிக்கப்படும். யாழ்ப்பாணத்தில் இருந்து கடலுணவுப் பொருள்களைக் கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்காகப் புதிய சரக்குவிமானம் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

★ யாழ்ப்பாணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் பாதுகாப்புப்படையினரின் விசாரணைகளின் பின்னர் கூடியவிரைவில் விடுதலை செய்யப்படுவர்.

★ அண்மையில் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக் கழக மாணவன் செல்வநாயகம் சுகந்தனின் விடுதலை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கிறேன். [இ-3-7]

# ஆஸ்பத்திரியில் தங்கி இருந்த நோயாளியைக் காணவில்லை

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். போதனா வைத்தியசாலை 24 ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் நேற்று முன்தினம் முதல் காணாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடுவிலைச் சேர்ந்த இராசநாயகம் ஆதர் அருள்ராசா (வயது 36) என்பவரே காணாமற் போனவராவார்.

கடந்த 5 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் காணாமற் போய் விட்டதாக யாழ். வைத்தியசாலைப் பொலீஸ் பிரிவில் வைத்தியசாலை நிர்வாகத்தினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவிடயமாக மனித உரிமை ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறி வீதியில் திரிந்த பிரஸ்தாப நபர் மீது பொலிஸார் சந்தேகம் கொண்டு அவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். வலயத்தைச் சேர்ந்த 29 ஆசிரியர் தீவகத்துக்கு

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் 29 ஆசிரியர்களுக்கு தீவக வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடமாற்ற உத்தரவு வழங்கபட்டுள்ளது.

கடந்த மாதம் குடாநாட்டில்இடம்பெற்ற இடம்பெயர் சேவையின்போது வடக்கு—கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரினால் மேற்படி இடமாற்றங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டதாகவும்—

இதற்கமைய கலை, வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கே இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும்—

கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் யாவும் வடக்கு—கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ஐ-10)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 9

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி. ப. 3 மணிக்கு ஜெட் லைனர்ஸ் ''ஏ'' அணி எதிர் ஈச்சமோட்டை வி. க அணி.

★ பி. ப. 4. 30 மணி— மின்னல் வி. க. அணி எதிர் வெங்கடேஸ்வரா வி. க. ''ஏ'' அணி. (இ-3-8)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 9

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1 30மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ். சண்முககுமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராசாவும், சிறப்பு விருந்தினராக நல்லூர் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயனும் கலந்து கொள்வர்.

(இ-3)

# விளையாட்டரங்கு

### இந்திய - நியூசிலாந்து ஆட்டத்தில்

# டெண்டுல்கர் - ட்ராவிட் ஜோடி ஒருநாள் போட்டியில் சாதனை

ஹைதராபாத், நவ. 9

இந்திய—நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணியின் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர், முன்னணித் துடுப்பாட்டக்காரர் ராகுல் ட்ராவிட் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இரண்டாவது விக்கெட்டுக்கான இணை ஓடடமாக 331 ஓட்டங்களை பெற்று புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுளளனர்.

நேற்றைய ஆட்ட ஆரம்பத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியஅணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் தமதுஅணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களின் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மட்டும்இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஓட்ட எண்ணிக்கையே ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணியினர் பெற்ற அதிஉயர் ஓட்ட எண்ணிக்கை ஆகும்.

அணியின் வெற்றிக்காக அணித தலைவர் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காது 150 பந்துகளில் 186 ஓட்டங்களையும் ராகுல் ட்ராவிட் 153 பந்துகளில் 153 ஓட்டங்களையும் பெற்றனர் இந்த ஓட்டங்கள் இவர்கள் இருவரினதும் அதிஉயர் ஓட்டங்கள் என்பதுடன் சச்சின் டெண்டுல்கர் பெற்ற 186 ஓட்டங்களே இந்திய அணியின் அதிஉயர் தனிநபர் பெற்ற ஓட்டங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

377 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றிபெற முடியும் என்ற நிலையில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 33.1 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன் மூலம் இந்த இரண்டாவது போட்டியில் இந்திய அணி 174 ஓட்டங்களால் வென்றது.

ஆட்ட நாயகனாக சச்சின் டெண்டுல்கர் தெரிவுசெய்யப் பட்டார்.

நடைபெற்றுவரும் இந்த ஐந்து ஆட்டங்கள் கொண்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் இரு அணிகளும் தற்போது ஒவ்வொரு போட்டிகளில் வென்று சமநிலையில் உள்ளன.

மூன்றாவதுஆட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறும்.

(இ-4-8)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம். நவ. 9

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியால் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றுக்கு இடையே நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்ஸ் வி. க. அணி யாழ். பல்கலைக் கழக வி. க. ''ப்ளூஸ்'' அணியை எதிர்த்து விளையாடும். (இ-8)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 9

சென் ஜோண்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கல்லூரி பழையமாணவர் சங்கம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் இன்று 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐ. வி. க. அணியை எதிர்த்து கோண்டாவில் மத்தி வி க. அணி மோதும்.

(இ-3-8)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் ''உதயன்'' வெற்றிக்கிண்ணத்துக்கான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:–

★ உடுப்பிட்டி அ. மி. க. எதிர் ஹாட்லிக் கல்லூரி.

★ நெல்லியடி ம. ம. வி. எதிர் சிதம்பரக் கல்லூரி.

(இ-3-8)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தையல்நாயகி தயானந்தன்

திருமதி தையல்நாயகி தயானந்தன் அவர்கள் நேற்று (08-11-99) நீர்கொழும்பில் காலமானார்.

இவர் எந்திரி ஆ. தயானந்தன் (பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், மாகாணம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் Dr. த. துஷ்யந்தன் (வைத்தியசாலை, நீர்கொழும்பு), எந்திரி த சுயந்தன் (Austrk Ltd. ஆஸ்திரேலியா), த. ஜெயந்தன் (மூன்றாம் ஆண்டு மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), த. தெய்வயானி (இரண்டாம் ஆண்டு இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்

ஆ. தயானந்தன் (கணவன்)
பிள்ளைகள்..

43. அச்சுக்கூட ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(70820)

## வீரசிங்கம் சண்முகலிங்கம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் 4ஆம் யூனிற் திருநகர், மல்லாவியைத் தற்போது வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சண்முகலிங்கம் 07-11-1999 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நகுலன், பத்மினி, பாமினி, கோகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உமா, ஸ்ரீதேவி, பாலசிங்கம், நாகேந்திரராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (8-11-99) திங்கட்கிழமை மல்லாவியில் இடம்பெற்றன.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்

ச. சிவசுப்பிரமணியம்
(மைத்துனர்)

வைத்தியசாலை வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(சி/9768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே அழகிய பெண் இத்தாலிய நடிகை சோபியா!

## லண்டன் மக்கள் கருத்து

லண்டன், நவ. 9

உலகிலேயே மிக அழகான பெண் இத்தாலியைச் சேர்ந்த முன்னாள் நடிகை சோபியா லோறன்ஸ் தான் என்று லண்டன் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவருக்கு வயது 65.

லண்டனின் 'பியூட்டிக்கோ' என்ற அழகுசாதனப் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றிலேயே லண்டன் மக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். உலகிலேயே மிக அழகான பெண் யார் என்பது குறித்து இந்த நிறுவனம் கருத்துக் கணிப்பு நடத்தியது.

சுமார் 3 ஆயிரம் பேர் இந்தக் கருத்துக் கணிப்பில் பங்கு கொண்டனர். இவர்களில் பெரும்பாலானோர் சோபியா தான் உலகின் அழகான பெண் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தன்னை உலகின் அழகிய பெண் என்று தெரிந்தெடுத்தமை குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும் —

வாழ்க்கையை நேசிப்பதாலேயே தான் இளமையாகவும் அழகாகவும் இருப்பதாகவும் —

சோபியா லோறன்ஸ் தெரிவித்துள்ளார். (ஐ-6)

# பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கையை வெளியேற்ற முயற்சி

ஜனநாயகக் கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகத்தெரிவித்து இலங்கையைப் பொதுநலவாய அமைப்பில் இருந்து வெளியேற்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் றொபின் குக்குக்கு நெருங்கிய தொடர்புடைய — லண்டனில் நிலைகொண்டுள்ள — சிந்தனையாளர்குழு ஒன்றே இது விடயமாகக் கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனநாயகக் கருத்துச் சுதந்திரம், மனித உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் இலங்கை உள்ளிட்ட நான்கு நாடுகள் தவறிவிட்டன என்றும் —

அதற்காக அவற்றை அமைப்பில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் — அந்தக்குழு கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த வார இறுதியில் டேர்பனில் நடைபெறும் இந்த அமைப்பின் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விடயம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் — இந்தக் குற்றச்சாட்டை இலங்கைவெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது. (இ-3-7)

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் யுத்தநிறுத்தம் செய்யவேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் தீர்மானம்

கொழும்பு, நவ. 9

டிசெம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படவேண்டும் என அரசாங்கத்தைக்கோரும் தீர்மானம் ஒன்று புத்தளம் நகரசபை மண்டபத்தில் கடந்த சனியன்று நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தலைமையில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் பேச்சுவார்த்தை மூலமே தொடரும் யுத்தத்துக்கு தீர்வுகாணமுடியும்என்றும்—

அரசாங்கம் உடனடியாக யுத்தத்தைநிறுத்தி விடுதலைப் புலிகளுடனும். எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முயல வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருவது என்றும்— அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-7)

# இந்தியா நல்ல சமிக்ஞைகளை வெளிக்காட்டினால்ஒத்துழைப்பு

## பாக். இராணுவ ஆட்சியாளர் தெரிவிப்பு

இந்தியா, பாகிஸ்தானுக்கு நம்பிக்கையான சமிக்ஞைகளைக் காட்டினால் இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பாகிஸ்தான் அதிக ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டு நாள்விஜயம் மேற்கொண்டு கட்டார் சென்றுள்ள முஷாரப் அங்கு செய்தியாளர்களிடம் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மிக மோசமான உறவுகள் காரணமாகவே தெற்காசிய நாடுகள் உலகின் இதர நாடுகளைப் போன்று பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைய முடியாமல் உள்ளது.

காஷ்மீர் விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கியமான பிரச்சினை. எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டால் இரு நாடுகளுக்குமான உறவுகளில்முன்னேற்றம் ஏற்பட முடியும்.

பாகிஸ்தானில் இருந்த வேறு எந்தத் தலைவரையும் விட இந்தியாவுடன் அதிகளவில் ஒத்துழைக்கத் தயார் —என்றும் அவர் தெரிவித்தார். [ஐ-7]

## ஓமந்தையில்...

[முதலாம் பக்கத் தொடர்]

தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

வவுனியாவில் இரு புறங்களில் இணைந்துள்ள படையினர் மூன்றுமுனைகளில்முன்னேறி புலிகளின் முன்னேற்ற முயற்சியைத் தடுத்து சண்டையிட்டுவருகின்றனர்.

அதேநேரம் நேற்று யுத்த முனையில் விடுதலைப் புலிகள் முன்னேறியதாக தகவல் இல்லை. அவர்களின் முன்னேற்ற முயற்சியும் இருக்கவில்லை—

இப்படி தெரிவிக்கப்பட்டது: (இ-3)

## ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 9

வெற்றிலைக்கேணியிலுள்ள படையினரின் முன்னணிக் காவலரண் பகுதியில் நடமாடிய விடுதலைப் புலிகளின் குழு ஒன்றின் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனவும் —

இதில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

துள்ள எஞ்சிய 30 பேரில் மூவர் மட்டுமே ஐ. தே. கவைச் சேர்ந்தவர்கள் என்றும் —

அவர்களையும் கட்சியில் இருந்து வெளியேற்றுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் — அவர் தெரிவித்தார். (இ-க-3-8)

# துரைராசா நினைவாக பல்கலையில்நாளை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா முன்னாள் பதிவாளர் வே. ந. சிவராசா ஆகியோரின் 66 ஆவது பிறந்த நாளை ஒட்டி யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளை காலை 10-30 மணிக்கு பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் சங்காபிஷேகம் இடம் பெறும்.

பிற்பகல் 3-30 மணி முதல் புவியியற்றுறை மண்டபத்தில் நினைவுப் பேருரைகள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம் பெறும்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன் பேராசிரியர் அ. துரைராசா நினைவுப் பேருரையையும்—

இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் வே. ந. சிவராசா நினைவுப் பேருரையையும் - நிகழ்த்துவர்.

இதைத் தொடர்ந்து பிற்பகல் 4-30மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெறும். (இ-3)

## மகளிருக்கான தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 9

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மகளிருக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியின் நிறைவுவிழா பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள பதில் ஆணையாளர் பி. பரஞ்சோதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நிதி உதவியுடன் யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்திய இந்தப் பயிற்சி நெறியில்ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த 30 யுவதிகள் கலந்து கொண்டனர்.

15 நாள்கள் நடைபெற்ற பயிற்சி நெறியின் இறுதிநாள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மூன்றுஇடங்களைச் சேர்ந்த யுவதிகளும் தத்தமது பிரதேசத்தின் பெயரில் பிரதேச மகளிர் அபிவிருத்தி அமைப்பு என்றபெயரில் சேமிப்புத் திட்டம் ஒன்றையும் வங்கிக் கணக்கையும் அங்குரார்ப்பணம்செய்தனர்.

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ். இராமச்சந்திரன், வேலணை உதவி அரச அதிபர் எஸ். இரத்தினம், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சி நெறியின் இணைப்பாளராக திருமதி எஸ். சந்திராதேவி செயற்பட்டார். (ஐ-10)

## விவசாய ஆசிரியர் பயிலமர்வு

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் விவசாயக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள விவசாயபீட உயிரியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்பயிலமர்வில் 50 ஆசிரியர்கள் கலந்து கொள்வர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் பயிலமர்வில் தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு பற்றிய விசேட பயிற்சி நெறிகள் இடம்பெறும். (3-10)


## சுனில் ஆட்ஸ்

Photo Chrome — Acme — Photo Prints

நீங்கள் விரும்பும் Colour lab இல் கழுவிப் பெற்றுக் கொள்ளலாம்.

27 - 10 - 99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச்சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.

13 - 11 - 99 படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுனில் ஆட்ஸ்

272: ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்,

(சி/9767)



## தொண்டமனாறு வெளிக்கள நிலையம்

இருபாலை, கோப்பாய்

2000 ஆண்டு க. பொ. த (உ/ த) வகுப்புகளில் உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர்கட்கான விசேட செய்முறை செயலமர்வு 10—11—99 புதன்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயிரியல் ஆய்வு கூடத்தில் நடைபெறும்.

மேற்படி வகுப்பில் உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

K. S. குகதாசன்

(தலைவர்)

தொண்டமனாறு வெளிக்கள நிலையம்

இருபாலை, கோப்பாய்.

(சி/9764)



## A/L 2000 DAY CLASS

புதிய அலகுகள் ஆரம்பம்

**வணிகப்புள்ளிவிபரவியல்**

திங், செவ். — நிகழ்தகவு

வியா., வெள். — மாதிரி எடுப்பு

**கணக்கீடு**

திங். செவ். வியா — நிறைவில் பதிவு

வெள். — கிரயக்கணக்கீடு

**வணிகக் கல்வி**

திங் வியா. வெள். — காப்புறுதி

செவ் — பரீட்சை

**பொருளியல்**

திங். செவ். வியா வெள். — சந்தைப் பொருளாதாரம்

வழமையான ஆசிரியர் குழுவால் இவ் அலகுகள் கற்பிக்கப்படும்.

★ இவ் அலகுகள் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

★ ஆனால் இவை மீண்டும் எவ்வித காரணம் கொண்டும் கற்பிக்கப்படமாட்டாது.

D.M.I.

யாழ் நகர்

(சி/9760)


## ஆஸ்பத்திரியில்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

ரைக் கைதுசெய்ததாகவும்—

பின்னர் அவர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும்—தமக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாக மனித உரிமை ஆணைக்குழு யாழ். இணைப்பதிகாரி எஸ் சிறீதரன் தெரிவித்தார். (இ-3-5)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 9-11-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org